**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

அ.வ.எண். 15 /2024 நாள்:22.09.2025

வா.சா:– 1சிவானந்தன் ஆஜர், சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி:– (4 பிரதிவாதி தரப்பில்):–

அயிட்டம் சொத்துக்கள் உடைய விவரங்கள் அனைத்தும் நான்தான் என் வழக்கறிஞரிடம் கொடுத்தேன் என்றால் சரிதான். சொத்து விவரத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் சரியானதா, பிழை உள்ளதா என்றால் பிழை இல்லை. 4ம் பிரதிவாதி என்ன எதிர்வாதம் செய்துள்ளார், என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்றால் நான் எதிர் வாதத்தை முழுவதாக படிக்கவில்லை. எதிர்வாதம் தாக்கல் செய்துள்ள சங்கதிகளை படித்து பார்த்து நான் மறுப்பு தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். அதில் உயிலை பொறுத்து ஆட்சேபணை செய்துள்ளேன். மற்ற விவரங்கள் பொறுத்து ஆட்சேபணை செய்யவில்லை. என்னுடைய தகப்பனாரின் தகப்பனார் கருப்பண கவுண்டர் கிரையம் வாங்கிய சொத்துதான் தாவா 1வது அயிட்ட சொத்து என்றாலும், அது தொடர்புடைய ஆவணம் தான் வா.த.சா.ஆ.1 என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கு நேரடி வாரிசுகள் எனது தகப்பனார் பூசாகவுண்டர் மற்றும் அவருடைய சகோதரன் சுப்பையன் என்றால் சரிதான். அந்த சொத்துக்களை பொறுத்து பூசாகவுண்டர், சுப்பையன் ஆகியோர்கள் இருவரும் பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் பஞ்சாயத்து பாகபிரிவினை செய்து கொண்டார்கள். மேற்படி பஞ்சாயத்து பாகபிரிவினை பத்திரம் எனது தகப்பனாரும், எனது தகப்பனாரின் சகோதரர் சுப்பையனும் பாகபிரிவினை செய்து கொண்டார்கள், அதுதான் வா.த.சா.ஆ.3 என்றால் சரிதான். வா.த.சா.ஆ.3 பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். அவ்வாறு பதிவு செய்யப்படாத ஆவணத்தின் அடிப்படையில்தான் எனது தகப்பனாரும், அவரது சகோதரர் சுப்பையனும் அவரவருக்கு பாத்தியப்பட்ட அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அதில் A பாக சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டது என்றாலும், B பாகசொத்துக்கள் சுப்பையனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். A பாக சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் வீடுகள் இருந்தன என்றால் சரிதான். அதன் கதவு எண்.14/14 என்றால் சரிதான்.



P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.09.22 17:15:20 +0200

அதை ஒட்டிதான் B பாக சொத்துக்கள் அமைந்துள்ளன , அதிலும் வீடுகள் இருந்தன என்றால் சரிதான். பாகபிரிவினை பிரிக்கப்பட்ட காலத்தில் எனக்கு ஆவணம் பற்றி தெரியும் என்றால் அவ்வளவாக தெரியாது, ஓரளவிற்கு தெரியும். அந்த பாகபிரிவினை ஆவணத்தை எழுதியவர் சி.சரஸ்வதி, ராக்கியா கவுண்டன் புதூர்(ஆர்.கே) புதூரை சேர்ந்தவர் என்றால் சரிதான். மேற்படி சி. சரஸ்வதி கிராம முன்சிப்பின் மனைவி என்றால் சரிதான். அவ்வாறு ஆவணத்தினை பதிவுசெய்யாதற்கு காரணம் ஆவணத்திற்கு அதிகப்படியான முத்திரை கட்டணம் செலுத்த வேண்டியதால் அவ்வாறு பதிவு செய்யப்படாத ஆவணம் எழுதிக்கொண்டார்கள், அப்போதைய நடைமுறையும் அவ்வாறுதான் இருந்தது என்றால் சரிதான். அவ்வாறு பதிவு செய்யப்படாத ஆவணம் எழுதியதன் பொருட்டு யாரும் எவ்வித ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரிதான். A பாக சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டது, B ஷெட்யூல் சொத்துக்கள் சுப்பையனுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் சரிதான். சுப்பையனுக்கு பாத்தியப்பட்ட சொத்தை வா.த.சா.ஆ.4 ஆவணத்தின் படி ஒரு சண்முகத்திற்கு சுப்பையனின் வாரிசுகள் கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த சண்முகத்திற்கு கிரையம் செய்து கொடுத்த சொத்துக்கள் 2007ம் ஆண்டு நான் சண்முகத்திடமிருந்து கிரையம் வாங்கினேன் என்றாலும் மேற்படி சொத்து வா.த.சா.ஆ.5 என்றாலும் சரிதான். சண்முகத்திடமிருந்து நான் கிரையம் வாங்கிய காலத்தில் எனது அப்பா உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். எனது தாயாரும் உயிருடன்தான் உள்ளார். மேற்படி சண்முகத்திடமிருந்து சொத்துக்கள் வாங்கிய விவரம் எனது தகப்பனாருக்கு தெரியும் என்றால் சரிதான். பூசாகவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களும், சண்முகத்திடம் இருந்து வாங்கிய சொத்துக்களும் ஒரு சேர இருந்ததால் எனது குடும்பம் கதவு எண்.14/14 என்ற வீட்டில் அந்த பஞ்சாயத்து பாகபிரிவினை செய்த காலத்தில் இருந்து அனுபவித்து வருகிறோம் என்றாலும், அது என்னுடைய சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது என்றாலும் சரிதான். **அயிட்டம் 2 பாத்தியப்பட்ட சொத்து 01.07.1981ல் பூசா கவுண்டரால் கிரையம் பெறப்பட்ட சொத்து என்றால் சரிதான். அது பி.வா.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அயிட்டம் 2ல் உள்ள சொத்தின் கதவு எண்.30 என்றால் அது பற்றி



P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2025.09.22 17:15:27 +0200

எனக்கு தெரியாது. மேற்படிஅயிட்டம் 2ன் மொத்த விஸ்தீரணம் 16 செண்ட் என்றால் சரிதான். அயிட்டம் 2ல் வாங்கப்பட்ட சொத்துக்களிலும் வீடு இருந்தது என்றால் சரிதான். அயிட்டம் 2ல் உள்ள வீட்டின் புகைப்படம் என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். **மேற்படி வீடு பி.வா.த.சா.ஆ.2 (எண்ணிக்கை 2) ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வீடு முதலில் ஆஸ்பெடாஸ் வீடாக இருந்து பின்னிட்டு தார்சு வீடாக மாற்றம் செய்யப்பட்டது என்றால் முதலிலேயே தார்சு வீடு இருந்தது, அது பின்னாளில் சீரமைப்பு செய்யப்பட்டு தார்சு வீடு கட்டப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வீட்டில் 4ம் பிரதிவாதி மகாதேவன் குடும்பம் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் திருமணம் ஆன காலத்தில் இருந்தே 4ம்பிரதிவாதி குடும்பம் அயிட்டம் 2 சொத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். நானும், எனது குடும்பமும் அயிட்டம் 1 சொத்தில் வா.த.சா.ஆ.3 ஆவணம் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு ரேஷன் கார்டு, ஆதார்கார்டு மற்ற அனைத்து குடியிருப்பு முகவரியும் அயிட்டம் 1 ஐ சார்ந்த கதவு எண்.14/14ல் உள்ளது என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி மகாதேவன் குடும்பம் முகவரி அனைத்தும் அயிட்டம் 2 சொத்து முகவரியில்தான் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதி அயிட்டம் 1 சொத்தில் தாவா தாக்கல் செய்த காலத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். 29.09.1987ல் ஏற்பட்ட பஞ்சாயத்து பாகசாசனம் ஆவணம் ஏற்படுத்தப்பட்டது உண்மைதான். அது எனது சகோதரிகள் ஒத்துக்கொள்ளாததன் காரணமாக நின்று போய் விட்டது. மேற்படி பஞ்சாயத்து பாகசாசனம்தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். **29.09.1987ல் ஏற்பட்ட பஞ்சாயத்து பாகசாசனம் ஆவணம் பி.வா.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எங்களுடைய வீடும், 4ம் பிரதிவாதி குடியிருக்கும் வீடும் பாகூர் பேரூராட்சிக்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான். எங்களுடைய வீட்டிற்கும், பிரதிவாதி குடியிருக்கும் வீட்டிற்கும் வீட்டு வரி முறையாக செலுத்தி வருகிறோம் என்றால் சரிதான். என்னுடைய வீட்டிற்கு தனியாக மின் இணைப்பு உள்ளது என்றாலும், 4ம் பிரதிவாதியின் வீட்டிற்கும் தனியாக மின் இணைப்பு உள்ளது என்றாலும் சரிதான். அயிட்டம் 1ல் உள்ள வீடு ஆரம்ப காலத்தில் பாகூரை சேர்ந்த மக்கள் அதிகப்படியான



P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2025.09.22 17:15:44 +0200

குடியிருப்பு பகுதியாக இருந்தது என்றாலும், அயிட்டம் 2ல் உள்ள சொத்து ஊருக்கு சற்று தள்ளி இருந்தது என்றாலும் சரிதான். அயிட்டம் 2 சொத்து 4ம் பிரதிவாதி குடியிருந்த வீடு பின்னிட்டு பஞ்சாயத்து ரோடு அமைக்கப்பட்ட பிறகு மதிப்பு கூடியுள்ளது என்றால் ரோடு முன்பே போடப்பட்டிருந்தது. அயிட்டம் 2 சொத்து சோளங்கா பாளையம் மெயின் ரோட்டிலிருந்து வந்தால் நேரடியாக ஒரு திருப்பம் திரும்பிய உடன் நேரடியாக அந்த வீட்டிற்கு செல்லலாம் என்றால் சரிதான். அயிட்டம் 2 சொத்திற்கு அருகில் பாசூர் பகுதியில் ஊருக்குள் குடியிருந்தவர்கள் அனைவரும் நிறைய நபர்கள் அவரவர்களுக்கு சொந்தமான நிலத்தில் வீடு கட்டி குடியேறி விட்டார்கள் என்றால் சரிதான். அந்த வீடு தற்போதைய நிலவரப்படி ரூ.40,00,000/- வருமா என்றால் இல்லை. ரூ.15,00,000/- மதிப்பு இருக்கும். அயிட்டம் 2ல் தார்சு வீடு இருப்பதாக காட்டி நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 4ம் பிரதிவாதிக்கு 2 மகள்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு திருமணம் செய்யப்பட்டு செட்டில் ஆகிவிட்டார்கள் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதியின் மகள்கள் வெளிநாட்டில் வேலையில் இருந்தார்கள் என்றால் தெரியாது. பெங்களூரில் கணினி பொறியாளராக வேலையில் இருந்ததாக சொன்னார்கள். எனக்கும் 4ம் பிரதிவாதிக்கும் இடையில் பெரிய நேசமான உறவுகள் 1984ம் வருடத்தில் இருந்து இல்லை என்றால் எனது அப்பா இறக்கும் வரை அனைவரும் நேசமாகத்தான் இருந்தோம். என்னுடைய குடும்பம் எனது அப்பா இறக்கும் வரையிலும், 1984ம் வருடத்திற்கு பின்னிட்டு நானும், எனது தகப்பனாரும் 4ம் பிரதிவாதியும் கூட்டு குடும்பமாக இருந்ததை காண்பிக்க எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அயிட்டம் 1ல் உள்ள சொத்துக்களில் இருந்து எங்கள் குடும்பத்திற்கு எவ்வித வருமானமும் வரவில்லை என்றால் இல்லை. எனது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட அயிட்டம் 1 சொத்து தவிர பிதுராஜித சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். எனது தாயார் தற்போது ராக்கியா கவுண்டன் புதூரில் குடியிருக்கும் கதவு எண்.11/14 என்ற எண்ணுடைய வீடு என்னுடைய தகப்பனார் 1998ம் வருடம் அவருடைய சுயசம்பாத்தியத்தை கொண்டு கிரையம் வாங்கிய சொத்துக்கள் என்றால் சரிதான். எனது தாயார் குடியிருக்கும் வீடு பற்றி எதாவது ஆவணம் ஏற்படுத்தி வைக்கப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு



P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2025.09.22 17:15:51 +0200

தெரியாது. மேற்படி சொத்துக்களை இந்த வழக்கில் சேர்த்தவில்லை என்றால் சரிதான். சுப்பையனிடம் இருந்து நான் வாங்கிய சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் இல்லை. நான், எனது தகப்பனார், 4ம் பிரதிவாதி ஆகியோர்கள் சேர்ந்து கூட்டாக சம்பாதித்த வருமானம் என்பதை காட்ட எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 24.08.1987ல் வா.த.சா.ஆ.3 ஆவணமான பஞ்சாயத்து பாகபிரிவினையில் கண்டுள்ள A ஷெட்யூல் வீடு எனக்கே வேண்டும் என்று எனது தகப்பனாரிடம் கேட்டதன் அடிப்படையில் அந்த பஞ்சாயத்து பாகபிரிவினை பத்திரத்தில் என்னுடைய தகப்பனார் அவருடைய சகோதரர் சுப்பையனிடம் பேசி தனக்கு ஒதுக்கிக்கொண்டு அதை எனக்கே விட்டுவிட்டார் என்றால் சரியல்ல. 01.07.1981ல் கருப்பண கவுண்டர் தனிப்பட்ட முறையில் சுயார்ஜித வகையில் கிரையம் பெற்ற தாவா 2வது அயிட் சொத்தை பொது குடும்ப தலைவர் என்ற முறையில் என்னுடைய தகப்பனார் பெயரில் கிரையம் பெற்றது என்று தாவா பிராதில் தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் தன்னுடைய 20வது வயதில் இருந்தே இரயில்வே பணியில் சேர்ந்து விட்டார் என்றால் தெரியாது. 1984ம் வருடம் ஓய்வு பெற்றுவிட்டார். அதற்கு முன்பு 30 வருடங்கள் ரயில்வே பணியாற்றியுள்ளார். தாவா 2வது அயிட்ட சொத்து அவர் தனிப்பட்ட முறையில் தனிப்பட்ட கிரையம் பெற்ற சொத்து என்றால் சரியல்ல. அப்போது எனக்கு தனிப்பட்ட வருமானம் எதுவும் இல்லை என்றாலும், நான் பொதுக்குடுப்பத்திற்கு எவ்வித வருமானமும் ஈட்டி தரவில்லை என்றாலும் சரியல்ல. நான் அப்போது நீல்கிரீஸ் பால் பண்ணையில் மாத சம்பளத்திற்கு வேலை பார்த்தேன். அதற்கான ஆவணம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாயார் குடியிருக்கும் வீடு 1998ம் வருடம் தனிப்பட்ட முறையில் என்னுடைய தகப்பனார் அவருடைய சுய வருமானத்தை கொண்டு கிரையம் வாங்கினார் என்று நான் சொல்லியுள்ள நிலையில் தாவா 2வது அயிட்ட சொத்து 1981ம் வருடம் பொது குடும்ப சொத்தாக என்னுடைய தகப்பனார் பெயரில் கிரையம் பெறப்பட்டது என்று தாவாவில் சொல்லியுள்ளது தாவாவை தாக்கல் செய்யவேண்டும் என்பதற்காக கூறப்பட்ட பொய்யான சங்கதிகள் என்றால் சரியல்ல. 1987ம் வருடம் வரை எனது அப்பா



P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2025.09.22 17:15:57 +0200

கடனாளியாகத்தான் இருந்தார். அதற்கான ஆதாரம் என்னிடம் உள்ளது. 1987ம் வருடம் வரை எனது அப்பா கடனாளியாகத்தான் இருந்தார் என்ற விவரத்தை நான் என் பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு ஒதுக்கப்பட்டதாக கூறப்படும் சொத்தில் என்னுடைய தாயாரும், தகப்பனாரும் குடியிருப்பதற்காக ஒரு வீடு ஒதுக்கப்பட்டும், அவர்களுடைய ஆயுட்காலத்திற்கு பின்னிட்டு அந்த வீடு எனக்கு வந்து சேரவேண்டியது என்றும், 4ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டதாக கூறும் தாவா 2வது அயிட்ட சொத்து மொத்தம் 16 சென்ட் நிலத்தில் 5 செண்ட் இடம் என்னுடைய தாயாரும், தகப்பனாரும் குடியிருந்து வந்து அவர்களுடைய ஆயுட்காலத்திற்கு பின்னிட்டு 4ம் பிரதிவாதியை சென்றடையவேண்டியது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் என்னுடைய தாயருக்கும், தந்தையாருக்கும் சேரவேண்டிய சொத்துக்களாக A பாகமாகவும், என்னுடைய சகோதரன் 4ம் பிரதிவாதிக்கு சென்றடைய வேண்டிய சொத்துக்கள் B பாகமாகவும், எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் C பாகமாகவும் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் இறுதியாக எங்கு இறந்தார் என்றால் அவர் மூன்றாவதாக வாங்கிய சொத்தில் இறந்தார். என்னுடைய வீட்டில் கொஞ்சகாலமாக எனது தாயாரும், தகப்பனாரும் வசித்து வந்தார்கள் என்றும், பின்னிட்டு 4ம் பிரதிவாதி வீட்டில் எனது தாயாரும், தகப்பனாரும் வசித்து பின்னிட்டு இறுதியாக மூன்றாவதாக வாங்கிய சொத்தில் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் இறந்ததற்கு பின்னிட்டு எனது தாயார் 4ம் பிரதிவாதி வீட்டில் இருந்தாரா என்றால் என்னுடைய வீட்டிற்கும் வரப்போக இருந்தார். தற்போது 4ம் பிரதிவாதி வீட்டில் உள்ளார். என்னுடைய சகோதரர் அவருடைய மகளுடைய வருமானத்தை கொண்டும், அவருடைய தனிப்பட்ட வருமானத்தை கொண்டும் சுமார் ரூ.25,00,000/- செலவுகள் செய்தும் தாவா 2வது அயிட்ட சொத்தில் பாசூர் பேரூராட்சியில் உரிய அனுமதி பெற்று தார்சு வீடு கட்டினார் என்றால் சரியல்ல. 2,3 பிரதிவாதிகளுக்கு எனது தகப்பனார் அவர் நன்றாக இருந்த காலத்திலேயே சீரும் சிறப்புமாக அனைத்து செலவுகளும் செய்து நல்ல முறையில் திருமணம் செய்து வைத்து அதற்கு பின்னிட்டும் உரிய சீர்வரிசை செய்து வந்தார் என்றால் சரிதான்.



P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2025.09.22 17:16:03 +0200

## Copy of Deposition

29.09.1987ம் தேதியிட்ட ஆவணம் பதிவு செய்யாததன் காரணமாக அதற்கு பின்னிட்டு 08.01.2008ம் தேதியில் எனது தகப்பனார் ஒரு விருப்புறுதி ஆவணம் 4ம் பிரதிவாதி பெயரில் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. அவர் மரணம் அடைவதற்கு 2,3 மாதங்கள் முன்பே சுயநினைவின்றி இருந்தார். இந்த வழக்கிற்காக அவர் இறப்பதற்கு 2,3 மாதங்கள் முன்பே சுயநினைவின்றி இருந்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 2வது அயிட்ட சொத்துக்களை 4ம் பிரதிவாதி அவருடைய மனைவிக்கு 11.11.2008ம் தேதியன்று ஒரு செட்டில்மெண்ட் செய்து விட்டார் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே மேற்படி விவரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு வழக்கிற்கு முன்பு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பு மூலம் நான் தெரிந்து கொண்டேன். ஆனால் தாவா பிராதில் மேற்படி செட்டில்மெண்ட் விவரங்களை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த தாவா சொத்துக்கள் அவரவரர்களுக்கு தனிப்பட்ட முறையில் ஒதுக்கப்பட்டு அவரவர்கள் தனி சுவாதீனத்தில் நீண்ட நெடுங்காலமாக இருந்து வருவதால் அதைப்பொறுத்து பாகபிரிவினை என்ற வழக்கு மூலமே எழவில்லை என்றால் சரியல்ல. இந்த தாவாவில் சொல்லியுள்ள வழக்கு மூலமே தவறு என்றால் சரியல்ல. எனது தாயார் குடியிருக்கும் 1998ல் எனது தகப்பனார் வாங்கிய சொத்தையும், நான் 2007ல் வா.த.சா.ஆ. 5 கிரையம் பெற்ற சொத்தையும் சேர்க்காததால் இந்த தாவா பகுதி பாகபிரிவினையால் பாதிப்படைந்துள்ளது என்றால் சரியல்ல.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.09.22 17:16:23 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |